# குடியரசு தின விழா 2025இல் பங்கேற்று புதுச்சேரி திரும்பிய தேசிய மாணவர்ப் படையினருக்கு ஆளுநர் மாளிகையில் அளிக்கப்படும் தேநீர் விருந்தில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் அவர்களின் உரை.

தேதி – 03-03-2025

அனைவருக்கும் வணக்கம்.

புது தில்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா 2025 அணிவகுப்பில் பங்கேற்று, தேசிய முகாம்களில் கலந்து கொண்டு, போட்டிகளிலும் வெற்றி பெற்று, வெற்றி முகத்தோடு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் ஆளுநர் மாளிகைக்கு வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டு முழுவதும் நீங்கள் செய்த கடுமையான பயிற்சியும் முயற்சியும் தான் உங்களுக்கு இந்த வெற்றியை தந்து இருக்கிறது. உங்களுடைய முகத்தில் ஒரு உற்சாகத்தை பார்க்கிறேன். உங்களால் புதுச்சேரி மாநிலம் பெருமை அடைகிறது. அதற்காக உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் மனமார்ந்த பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய பயிற்சியின் போது பல தடைகளை கடந்து, தில்லியின் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் பயிற்சி செய்து, நீங்கள் சாதனை படைத்து இருக்கிறீர்கள். இந்த அனுபவங்கள் எல்லாம், உங்களிடத்தில் மறைந்து இருக்கும் சக்தியை அடையாளம் காட்டி, சவால்களை கடந்து வருவதற்கான பாடத்தையும் சொல்லிக் கொடுத்து இருக்கும்.

இந்த பாடங்கள் எல்லாம் கடைசிவரை உங்கள் வாழ்க்கையை வழிநடத்தும். இந்த நாட்டிற்காக நீங்கள் உழைக்க வேண்டியதை எப்போதும் நினைவு படுத்திக் கொண்டே இருக்கம் என்ற நம்புகிறேன்.

மாணவர்களே!... இந்தியா இளைஞர்களின் தேசம். இந்திய மக்கள் தொகையில் சுமார் 30 % இளைஞர்களாக இருக்கிறார்கள். இந்த ஒட்டுமொத்தமான தேசமும் இளைஞர்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறது. நீங்கள் தான் இந்தியாவின் எதிர்கால தலைவர்கள். இந்த நாட்டை வழிநடத்தப் போகிறவர்கள். இந்திய நாட்டை ஒரு வல்லரசாக, வளர்ச்சி அடைந்த, வளம் பொருந்திய நாடாக மாற்றுவதற்கான பேரியக்கத்தை முன் எடுப்பவர்கள். நீங்கள் கற்றுக் கொண்ட பாடங்கள் உங்களுக்கு உதவியாக இருந்து இந்த சமுதாயத்தை வழி நடத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

பல தருணங்களில் NCC மாணவர்களின் உற்சாகத்தை, உழைப்பை, சேவை மனப்பான்மையை நான் கவனித்து இருக்கிறேன். புயல், வெள்ளம், நிலநடுக்கம், ரயில் விபத்து போன்ற பல நேரங்களில் NCC மாணவர்கள் மிகுந்த மனவலிமையோடு சேவை செய்வதை பார்த்திருக்கிறேன். அது மட்டுமல்ல கடற்கரை தூய்மை, பிளாஸ்டிக் ஒழிப்பு போன்ற பல விழிப்புணர்வு இயக்கத்தையும் முன் எடுத்துச் செல்கிறார்கள். அதில் அவர்களுடைய சமூகப் பொறுப்பு உணர்வு, அர்ப்பணிப்பு, தலைமைப் பண்பு, ஒழுக்கம் வெளிப்படுவதை பார்க்க முடிகிறது.

தமிழ்நாடு, புதுச்சேரி, அந்தமான் தேசிய மாணவர்ப்படை பிரிவு – தேசிய முகாம்களில் கலந்து கொண்டு துப்பாக்கி சூடும் போட்டி, படகு போட்டி உள்ளிட்ட பல போட்டிகளில் வெற்றி பெற்று மூன்றாவது பரிசு பெற்று இருப்பதை அறிந்தேன். நீங்கள் பெற்ற இந்த வெற்றி மற்ற மாணவர்களுக்கு ஒரு உத்வேகத்தைத் தரும். உங்களை வழிநடத்தி, பயிற்சி அளித்து, இந்த வெற்றி இலக்கை நோக்கி இட்டுச் சென்ற உங்களுடைய ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், நெறியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும் இந்த வெற்றியை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டும். புதுச்சேரிக்கு பெருமை சேர்க்க வேண்டும். உங்களுடைய ஒவ்வொரு முயற்சியும், எழுச்சியும் மாண்புமிகு பாரத பிரதமர் நரேந்திர மோடி முன்வைத்த VIKSIT BHARAT@2047 அதாவது சுதந்திரம் அடைந்த 100-வது ஆண்டில் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிய நம்முடைய பயணத்திற்கு வலிமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி வணக்கம்**